DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.

C.C. No. 138/22 P.W .1

Name: கந்தசாமி	Father's Name : அருணாச்சலம்
Village:	Taluk :
Age :	Occupation :
Caste :	Religion :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.09..2022

<u>20 .09.2022:</u> முதல் விசாரணை:

நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது எனது கையொப்பம் தான். கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

கடந்த 28.01.2002 ம் தேதிய புகார்தாரர் நிறுவனத்தின் **பதிவுச்சான்று** நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது **ம.சா.ஆ.1** ஆகும் . 01.04.2016 தேதியன்று ஏற்படுத்தப்பட்ட Reconstituted Partnership Deed நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது **ம.சா.ஆ.2** ஆகும். கடந்த 22.07.2022 இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கானாடுகாத்தான் கிளை **காசோலை** (காசோலை எண். 176942)அசல் **ம.சா.ஆ.3** ஆகும். கடந்த 26.07.2022 ம.சா.ஆ.3 காசோலை போதிய பணமில்லை என்ற காரணத்திற்காக **திருப்பப்பட்ட குறிப்புச்சீட்டின் அசல் ம.சா.ஆ.4** ஆகும். கடந்த 05.08.2022 இது சம்பந்தமாக எதிரிக்கு அனுப்பிய **வழக்கறிஞர் அறிவிப்பு** (அஞ்சலக ரசீதுடன்) அலுவலக நகல் **ம.சா.ஆ.5** ஆகும். . **ம.சா.ஆ.5** அறிவிப்பு 08.08.2022 அன்று எதிரி பெற்றுக்கொண்டதற்கான **அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் ம.சா.ஆ.6 ஆகும்.** கடந்த 12.04.2021 அன்று எதிரி புகார்தாரர் நிறுவனத்திடம் **கடன் கேட்டதற்கான மனு மற்றும் வவுச்சர்** அசல் **ம.சா.ஆ.7** ஆகும். மனுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுகிறேன்.